සියලුම හිමිකම් ඇවිරිණ / முழுப் பதிப்புரிமையுடையது / *All rights Reserved*

மத்துகம அධ්‍යාපන කලාපය மத்துகம கல்வி வலயம் மத்துகம அධ්‍යාපන කලාපය மத்துகம கல்வி வலயம் மத்துகம அධ්‍යාපන කලාපය மத்துகம கல்வி வலயம் மத்துகம அධ්‍යාපන කලාපය

**மத்துகம கல்வி வலயம்**

# இரண்டாம் தவணை பரீட்சை – 2023

| தரம் :- 09 | பாடம் :- புவியியல் | வினாப்பத்திரம் I , II | நேரம் :- 02 மணித்தியாலங்கள் |
|---|---|---|---|

பெயர் :- ........................................................................................................

**அறிவுறுத்தல்கள்**

- **1 – 5 வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

1. உலகின் அதி உயர்ந்த மலை சிகரமான ............................ ஆசியாக கண்டத்தில் அமைந்துள்ளது.
   ( அட்லஸ் / எவரெஸ்ட் / றொக்கி )

2. ஆசியா கண்டத்தில் அமைந்துள்ள ஓப், யெனிசி, லீனா ஆகியவை ............................... சமுத்திரத்தை சென்றடைகின்றது.
   ( பசுபிக் / அத்திலாண்டிக் / ஆட்டிக் )

3. பருத்தித்துறையிலிருந்து தேவேந்திரமுனை வரை நீளம் .......................... KM ஆகும்.
   ( 432 / 224 / 325)

4. ஓக், மல்பெரி, செஸ்னட், பைன், யுகெலிப்ட்ஸ் என்பன ...................................... வலய காடுகளாகும்.
   ( இடைவெப்ப / அயன / குளிர்)

5. இலங்கைக்கு தென்மேல் பருவக்காற்று மழை கிடைப்பது ........................... காலப்பகுதியில் ஆகும்
   ( மே தொடக்கம் செப்டம்பர் வரை/ மார்ச் தொடக்கம் ஏப்ரல் வரை/ டிசம்பர் தொடக்கம் பெப்ரவரி வரை)

**சரியாயின் (✓) எனவும் பிழையின் (✗) எனவும் அடையாளம் இடுக.**

6. ஆசியாவின் மிக குறைந்த வெப்பநிலை நிலவுவது ரஸ்யாவில் அமைந்துள்ள வர்க்கேயன்ஸ் நகரில் ஆகும். ( )

7. இலையுதிர் காடுகளை குளிர் வலயத்தில் அவதானிக்கலாம். ( )

8. பாகிஸ்தானின் பிரதான விவசாய பருவங்கள் காரிப், ராபி என அழைக்கப்படுகின்றன. ( )

9. சர்வதேச தொடர்பாடல் சேவைகளான CNN, Al Jazeera போன்றவற்றை வழங்குவது டுபாய் நகரமாகும். ( )

10. மலைநாட்டு பிரதேசங்களில் கன்டல் தாவரங்களை அவதானிக்கலாம். ( )

**அடைப்புக்குள் இருந்து பொருத்தமான விடையை தெரிவு செய்து இடைவெளி நிரப்புக.**

**( மாலிபொட ,ஹற்றன், கரையோர சமவெளி, முல்லைத்தீவு, வெளிமடை, கம்பஹா, சாக்கடல் )**

11. கடல் மட்டத்தினை விட மிகத் தாழ்வாக அமைந்துள்ள ......................................... ஆசியா நிலப் பகுதியிலேயே காணப்படுகின்றது.

12. .................................. மேட்டு நிலம் சிவனொளிபாதமலைத் தொடருக்கு அருகில் அமைந்துள்ளது.

13. இலங்கையில் அதிக மழை வீழ்ச்சி கிடைக்கப் பெறுவது ..................................... பிரதேசத்திலாகும்.

14. இலங்கையில் சுண்ணக்கல் அகழ்வு உப்புக் கைத்தொழில் போன்ற மானிட செயற்பாடுகள் இடம்பெறுவது ................................ ஆகும்.

15. இலங்கையில் சனத்தொகை குறைந்த மாவட்டமாக கருதப்படுவது ..................................... ஆகும்.

**பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

16. அயனமழைக் காடுகளில் காணப்படும் தாவரங்களுள் உள்ளடங்குவது.
   1. பைன்,யூக்லிப்ரெஸ் 2. ஓக்,ஸ்புரூஸ் 3. பைன்,லாச் 4. மூங்கில், கருங்காலி

17. சேவை நிலையமாக விளங்கும் நாடு
   1. பாகிஸ்தான் 2. இந்தியா 3. ஜப்பான் 4. டுபாய்

18. இலங்கையில் பெரும்பாலான ஆறுகள் பாய்ந்து செல்வது.
   1. ஈர வலயம் 2. அரைவரல் வலயம் 3. தாழ்நிலை ஈரவலயம் 4. வறண்ட வலயம்

**பின்வருவனவற்றை பொருத்தமாக இணையுங்கள்**


19. கைத்தொழில் — A. துபாய்
   சேவை — B. பாகிஸ்தான்
   விவசாயம் — C. ஜப்பான்
   D. இலங்கை
   1. ABC 2. CBA 3. CAB 4. CDA

20. சிங்களம் — A. 11.2
   இந்திய — B. 9.2
   தமிழர் — C. 4.2
   இலங்கை தமிழர் — D. 74.9
   1. ABC 2. BCA 3. CDA 4. CAB

**( 2 x 20 = 40 புள்ளிகள் )**

**பகுதி - ii**

**முதலாம் வினா கட்டாயமானது.**
**ஏனைய வினாக்களிலிருந்து நான்கு வினாக்களை தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**



**1)** மேலுள்ள உலகப்படத்தினை அவதானித்து கீழே வினவப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

i. A எனும் எழுத்தினால் காட்டப்பட்டுள்ள கடலின் பெயர் யாது?

B எனும் எழுத்தினால் காட்டப்பட்டுள்ள நதி எது?

C இன்னும் எழுத்தினால் காட்டப்பட்டுள்ள தீவு எது?

D எனும் எழுத்தினால் காட்டப்பட்டுள்ள நாடு எது?

E எனும் எழுத்தினால் காட்டப்பட்டுள்ள விரிகுடா எது? **( 1 x 5 = 5 புள்ளிகள் )**

ii. கோகோஸ் மலைத்தொடரை குறித்து காட்டும் எழுத்து எது? **( 1 புள்ளி)**

iii. a. ஆசியாவின் 1 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் வாழும் சனத்தொகை அடர்த்தியாது?

b. ஆசியாவில் குறைந்த சனத்தொகை வாழும் நாடுகள் இரண்டை குறிப்பிடுக?

c. மலைநாட்டு இரவலைய காடுகள் பரம்பியுள்ள இரண்டு பிரதேசங்களை குறிப்பிடுக?

d. யாழ்ப்பாணப் பிரதேசத்தில் பணியை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் தயாரிப்புகள் இரண்டை குறிப்பிடுக?

e. இலங்கையின் சனத்தொகையானது எத்தனை மில்லியன்களாகும்?

**( 2 x 5 = 10 புள்ளிகள் )**


**2)** 1. ஆசியா கண்டத்திற்குரிய மிகப்பெரிய தீவுகள் இரண்டை குறிப்பிடுக?

2. ஆசியா பிரதேசத்தில் வாழும் மனித இனங்கள் இரண்டை குறிப்பிடுக?

3. உலகில் கைத்தொழில் நாடாக ஜப்பான் பிரசித்தி பெற்று காணப்படுவதற்கான காரணங்கள் ஐந்தினை எழுதுக?

**( 2 + 4 + 5 = 11 புள்ளிகள் )**

**3)** பின்வரும் இலங்கை படத்தினை அடிப்படையாகக் கொண்டு வினவப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.



1. இலக்கம் 1 மற்றும் 2 இல் காணப்படும் நிலத்தோற்றங்களை பெயரிடுக?

2. இலக்கம் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிலத்தோற்றத்தில் ABCD எனும் எழுத்துக்களால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள இடங்களின் பெயர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது அவ்விடங்களுக்கு பொருத்தமான ஆங்கில எழுத்தை எழுதவும்.
   1. திருகோணமலை
   2. கற்ப்பிட்டி
   3. மன்னார்
   4. தேவேந்திரமுனை

3. கண்டல் தாவரங்களின் இயல்புகள் **மூன்றினை** குறிப்பிடுக?

**( 2 + 4 + 5 = 11 புள்ளிகள் )**

4) 1. காலநிலை என்றால் என்ன என்பதை சுருக்கமாக விளக்குக?

2. வெப்பநிலை மாற்றத்தில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள் **இரண்டை** குறிப்பிடுக?

3. இலங்கையில் காலநிலை வளையங்களில் **இரண்டை குறிப்பிட்டு அவற்றில் ஒன்றை** விளக்குக?

**( 2 + 4 + 5 = 11 புள்ளிகள் )**

5) 1. இலங்கையில் சனத்தொகை பற்றிய தகவல்களை மதிப்பிடும் திணைக்களம் எது ?

2. இலங்கையின் சனத்தொகை பரம்பல் சமனற்று காணப்படுவதற்கான காரணங்கள் **இரண்டினை** குறிப்பிடுக?

3. இலங்கையில் மேற்கொள்ளப்படும் விவசாய நடவடிக்கைகள் **ஐந்தினை** எழுதுக?

**( 2 + 4 + 5 = 11 புள்ளிகள் )**

6) 1. இலங்கையில் உலர் வலயத்தில் மேற்கொள்ளப்படும் விவசாய நடவடிக்கைகள் **இரண்டை** குறிப்பிடுக?

2. இலங்கையில் மத்திய மலை நாட்டில் மேற்கொள்ளப்படும் மானிட செயற்பாடுகள் **நான்கினை** எழுதுக?

3. எமது நாட்டின் பௌதிக வளங்களை பாதிக்கின்ற மனித செயல்பாடுகள் **ஐந்தினை** குறிப்பிடுக?

**( 2 + 4 + 5 = 11 புள்ளிகள் )**

7) 1. தலா வருமானம் என்றால் என்ன?

2. அபிவிருத்தியை அளவிடுவதற்கு பயன்படுத்தப்படும் குறிக் காட்டிகள் **இரண்டை** குறிப்பிடுக?

3. உமது பிரதேசத்தில் இடம்பெறும் சூழல் மாசடைவு தொடர்பாக சுருக்கமாக விளக்குக?

**( 2 + 4 + 5 = 11 புள்ளிகள் )**

LOL.lk
BookStore

# විභාග ඉලක්ක පහසුවෙන් ජයගන්න

ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න






| කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් | සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර | A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත් | School Book | ගුරු අත්පොත්

pesuru Prakashana Private Ltd. | Akura Pilot | සමනල දැනුම | T | සතර

පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට

**www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න**